

வேலூர் மாநகர தி.மு.க. மற்றும் சங்கரன் பாளையம் பகுதி தி.மு.க. சார்பில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. நலஉதவிகளை வழங்கினார்.



கட்டுமானம் மற்றும் மனைத்தொழில் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற கடலூர் மத்திய மாவட்ட நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் கட்டுமான தொழிலாளர் நலவாரிய தலைவர் பொன்குமார் சிறப்புரையாற்றினார். வி.சீத்தாராமன் வரவேற்புரையாற்றினார். பி.மணிகண்டன் தலைமை தாங்கினார். எஸ்.யுவராஜ், எஸ்.ஜெகதீசன், ஆர்.பானுகோபன், டி.ரஜினிராஜ், ஏ.கே.பாபு, என்.கொற்றவன், எஸ்.தொல்காப்பியன், ஏ.பி.வவிஜயரங்கன், கே.மாயகிருஷ்ணன் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு!

## தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கையில் அதிர்ச்சித் தகவல்!

புதுடெல்லி, டிச. 28 -

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிக அளவில் நடைபெற்று வருவது தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் மூலம் அம்பலமாகியுள்ளது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி. உத்தரப்பிரதேசம், குஜராத் போன்ற மாநிலங்களில் அதிக அளவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது... பாஜக ஆளும் மாநிலங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைதான் உள்ளது. இந்தியா முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய பாலியல் வன்முறை சம்பவங்கள் பல, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில்தான் அரங்கேறியுள்ளன.

காஷ்மீர் சிறுமி ஆசிஃபாவை வன்புணர்வு செய்து கொன்ற குற்றவாளிகளுக்கு ஆதரவாக பா.ஜ.க. அமைச்சர்களே பேரணி நடத்தி உலக அரங்கில் இந்தியாவிற்கு அவமரியாதை ஏற்படுத்தினர்..

உத்தரப் பிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் தலைமையிலான ஆட்சியில் உன்னாவ் முதல் பண்டா வழக்கு எனப் பல பாலியல் கொடுமைகளை பா.ஜ.கவினர் அரசியல் பலத்தை கொண்டு நீதிக்குப் புறம்பாக அரங்கேற்றினார்கள். கடந்த 2017ம் ஆண்டு உன்னாவ் மாவட்டத்தில் 17 வயது இளம்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்தவர் பா.ஜ.க எம்.எல்.ஏ குல்தீப் சிங் செங்கார். அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு, எம்எல்ஏ பதவியும் பறிக்கப்பட்டது.

கடந்த 2020ம் ஆண்டு உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராஸில் தலித் பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்டதும் பாஜக ஆட்சியில்தான். இதுதொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற கேரளாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் சித்திக் கப்பானை 2 ஆண்டுகள் சிறையில் வைத்தது உத்தரப் பிரதேச பா.ஜ.க. அரசு..

உத்தரப்பிரதேச மாநிலம் சோன்பத்ராவில் 2014ம் ஆண்டு 15 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் பாஜகவை சேர்ந்த ராம்துலார் கோந்த் என்பவர் கைது செய்யப்பட்டார். பாலியல் வழக்கில் கைதாகி ஜாமினில் வெளிவந்த அவருக்கு சட்டப்பேரவைத் தேர்தலில் சீட் கொடுத்து எம்எல்ஏ ஆக்கி அழகு பார்த்தது பாஜக .. நீண்ட இழுபறிக்குப்பிறகு இந்த வழக்கில் கடந்த 2023ம் ஆண்டு தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம் பா.ஜ.க. எம்.எல்.ஏ. ராம்துலார் கோந்த் குற்றவாளி என தீர்ப்பளித்தது. இதனால் அவர் எம்எல்ஏ பதவியையும் இழந்தார்....

உத்தரப்பிரதேச மாநிலம் வரணாசியில் கடந்த 2023 நவம்பர் மாதம் ஐஐடி கல்லூரி மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்து, வீடியோ எடுத்து மிரட்டிய வழக்கில் பாஜக ஐ.டி.விங் நிர்வாகிகள் 3 பேர் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டனர்..

பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் மத்தியப் பிரதேசத்தில் கடந்த செப்டம்பர் மாதம் ராணுவ வீரர்களை தாக்கி, அவர்களின் பெண் தோழி கூட்டு பாலியல் வன்முறைக்கு ஆளாகியிருப்பது, தேசத்தையே இழிவுக்குள்ளாக்கியது.

அதே மத்தியப்பிரதேச மாநிலத்தின் புனித நகரான உஜ்ஜையினியில் கடந்த செப்டம்பர் மாதம் நடுரோட்டில் பெண் ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்து, அதனை வீடியோ எடுத்து இணையதளத்தில் வெளியிட்ட சம்பவம் நாடுமுழுவதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது..

இதேபோல், மத்தியப்பிரதேசத்தில் பாலியல் வன்கொடுமை வழக்கில் பாஜகவை சேர்ந்த முன்னாள் அமைச்சர் சின்மயானந்தா கைது செய்யப்பட்டார்..

பா.ஜ.க. ஆட்சி செய்யும் மணிப்பூரில் ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறை நீடித்து வரும் நிலையில், குக்கி பழங்குடியினத்தைச் சேர்ந்த 2 இளம் பெண்களை ஒரு கும்பல் நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக இழுத்துச் சென்றது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

குஜராத்தில் பில்கிஸ் பானுவை கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்து, அவருடைய 3 வயது குழந்தை உட்பட 14 பேர் படுகொலை செய்த குற்றவாளிகளை விடுதலை செய்தது அம்மாநில பா.ஜ.க அரசு... விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகளை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றதும் பாஜகவினர்தான்....

குஜராத்தில், குறைந்த வட்டிக்கு பணம் தருவதாக க்கூறி 60க்கும் மேற்பட்ட பெண்களை பாலியல் வன்கொடுமை செய்த புகார்ல பாஜகவை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர்..

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தொடர்புடைய எம்.பி., எம்.எல்.ஏக்கள் அதிகமுள்ள கட்சி பாஜக என்பதையும் ஜனநாயக சீர்திருத்த சங்கம் எனும் ஆய்வு அமைப்பு அம்பலப்படுத்தியது.

கர்நாடகாவில் பாலியல் வன்கொடுமை செய்த தை வீடியோ எடுத்துவைத்து மிரட்டியதாக பாஜக எம்எல்ஏ முனிரத்னா கைது செய்யப்பட்டார்..

முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் பேரன் பிரஜ்வல் ரேவண்ணா மீது மலையளவு பாலியல் குற்றச்சாட்டுகள் குவிந்தன.. நாடே அதிர்ச்சிக்குள்ளான இந்த சம்பவத்திற்குப் பிறகும் பிரஜ்வல் ரேவண்ணாவுக்கு மக்களவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கியது பாஜக கூட்டணி... ரேவண்ணாவுக்கு ஆதரவாக பிரச்சாரமும் செய்தனர் பாஜக தலைவர்கள்...

பிரஜ்வல் ரேவண்ணாவுடன் தொடர்பாக பாஜக நிர்வாகி தேவராஜ கவுடாவும் பாலியல் துன்புறுத்தல் புகாரில் கைது செய்யப்பட்டார்..

நிர்வாகிகளைத் தாண்டி, ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் மீதும் பாலியல் வன்கொடுமை புகார் பதிவு செய்யப்பட்ட வரலாறும் பாஜகவையே சேரும்..

கர்நாடக மாநில முன்னாள் முதலமைச்சரும், மூத்த தலைவருமான எடியூரப்பா, தன்னிடம் உதவி கேட்டு வந்த சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த புகாரில் அவர் மீது போக்சோ வழக்கு பதிவு செய்யப்பட்டு சிஐடி விசாரணை நடைபெற்று வருகிறது....

பா.ஜ.க. தகவல் தொழில்நுட்ப பிரிவின் தேசிய தலைவர் அமித் மாளவியா, பல பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த் சாந்தனு என்ற பெண் குற்ற ஞ்சாட்டினார்..

மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த பாஜக எம்.பி. பிரிஜ் பூஷனுக்கு ஆதரவாக மோடி அரசு செயல்பட்டது.

போராடிய மல்யுத்த வீராங்கனைகளை அடித்து துன்புறுத்தி ஒடுக்கிய அவலத்தை உலகமே பார்த்தது மோடி ஆட்சியில்தான்...

நெய்வேலியில் கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்பு சார்பில்

# கடலூர் மத்திய மாவட்ட நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## கட்டுமான தொழிலாளர் நல வாரியத் தலைவர் பொன்.குமார் பங்கேற்பு!

கடலூர், டிச. 28 -

கடலூர் மத்திய மாவட்ட கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்பு சார்பில் நிர்வாகிகள் அறிமுக கூட்டம் நெய்வேலி இந்திரா நகர் பி1 ப்ளாக் மாற்று குடியிருப்பு மணி அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கடலூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் பி.மணிகண்டன் தலைமை தாங்கினார், சூழலியல் பாதுகாப்பு கூட்டமைப்பின் நிறுவனர் வி. சீத்தாராமன் முன்னிலை வகித்தார், .

இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்பு தலைவரும் கட்டுமான தொழிலாளர் நல வாரிய தலைவர் பொன்குமார் கலந்து கொண்டு பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில செயலாளர் எஸ்.யுவராஜ், மாநில பொருளாளர் எஸ். ஜெகதீசன், மாநில இணை செயலாளர் ஆர்.பானு கோபன், தலைமை நிலைய செயலாளர் டி.ரஜினிராஜ், மாநில துணை செயலாளர் ஏ.கே.பாபு, மாநிலத் துணை செயலாளர் என். செந்தமிழ் கொற்றவன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.தொல்காப்பியன், மாவட் டச் செயலாளர் ஏ.பி.விஜயரங்கன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வடக்குத்து மாயகிருஷ்ணன் நன்றி கூறினார்.

நல்லி குப்புசாமி – சேது சொக்கலிங்கம் தலைமையில் – நாளை

# இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்க வெள்ளி விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி – வழுவூர் ரவிதேவா சிறப்புரை!

சென்னை, டிச. 28 -

தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு பதிவு துவக்க விழா மற்றும் இசை வேளாளர் நலச் சங்கத்தின் 25ஆம் ஆண்டு விழா நாளை (29.12.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 8.45 முதல் மாலை 5.30 மணி வரை சென்னை, ராஜா அண்ணாமலை புரம், டி.என். ராஜரத்தினம் கலையரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் காலை அமர்வில் நல்லி குப்புசாமி செட்டியார் தலைமையில், தஞ்சை மாநகரக் கழகச் செயலாளர் சண். இராமநாதன் முன்னிலையில் சிறப்பு விருந்தினராக அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு விழா பேருரை நிகழ்த்துகிறார்.

கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி, முனைவர் காரை சிதம்பரம் ஆகியோர் விளக்கவுரை ஆற்றுகின்றனர்.

இதில் டி.வி.வீரமணி, வழுவூர் ரவிதேவா, ஆடானை சுகுமார், அஞ்சுகம் குமர குரு ஆகியோருக்கு விருது வழங்கப்படுகிறது. உயர்நீதிமன்ற வழக்குரைஞர் முத்தப்பன் நன்றி கூறுகிறார்.

மேலும், அன்று பிற்பகல் நிகழ்ச்சியில் ‘பபாசி’ தலைவர் சேது சொக்கலிங்கம் தலைமை வகிக்க, இசைவேளாளர் சங்கத் தலைவர் வழுவூர் ரவி தேவா முன்னிலை மற்றும் சிறப்புரையுடன், பாகனேரி கார்த்திக், சமயபுரம் சேது லட்சுமணன், புதுக்கோட்டை தயாளன், விராலிமலை பூபாலன், காரைக்குடி கதிர்வேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

தஞ்சை மு. பாலமுருகன் குரல் வாத்திய லய இன்னிசை வழங்க திருவாரூர் டி.ஏ.வீரமணி நன்றி கூறுகிறார்.

மேலும் இதில் கே.பில்லப்பன், சி.எம். கொளஞ்சியப்பன், சி.கே. சாரதாம்பாள், எம்.எஸ்.ரவிக்குமார், ஜி.மாரியப்பன், என். மணிவண்ணன், சி.டி. கண்ணன், ஜி.பால்ராஜ், டி. அப்பாத்துரை, திருமயிலை கே.செல்வம், வி.எல். ஹரீஷ், கல்பனா கணேசன், ந.மணிவண்ணன்,

இ. லெட்சுமணன், எஸ். ஆர்.ஜி.எஸ். மோகன்தாஸ், செல்வன் மனோ, செல்வி அனுகீர்த்தி உட்பட சமுதாய உறுப்பினர்கள் பலர் கலந்து கொள்கின்றனர்.

நெல்லை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுவதையொட்டி -

# பகுதிச் செயலாளர்கள் - மாநகரக் கழக அணிகளின் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்பு!

நெல்லை, டிச. 28 -

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு அறிவிப்பின்படி இன்று (28.12.2024 - சனிக்கிழமை) காலை 10 மணிக்கு நெல்லை மாநகராட்சி எதிரே உள்ள வர்த்தக மையத்தில் நெல்லை மாவட்ட தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இது தொடர்பாக நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மாநகர அலுவலகத்தில் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான பகுதி செயலாளர்கள் மற்றும் மாநகர தி.மு.க.சார்பு அணிகளின் ஆலோசனை கூட்டம் நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி தலைமையில் மாநகர துணை செயலாளர்கள் அப்துல் கையூம்,

தச்சநல்லூர் பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன், பாளையங் கோட்டை பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் பங்கேற்று பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் வேங்கை வெங்கடேஷ், வழக்கறிஞர் ஜாகிர் உசேன், வழக்கறிஞர் அலிஃப் மீரான், மாயா, இனியன், அன்பழகன், அவதார் ஷாஜகான், சித்திக், காஜா மைதீன், கேபிள் குமரேசன், சடாமுனி, ஷெட்டி, நச்சினார் இனியன், எஸ். எஸ்.முத்து, சார்லஸ் முத்துராஜ், மகாராஜன், தளபதி ஆறுமுகம், செந்தில்குமார், வின்சென்ட் வினோத், கிருஷ்ணகுமார், சிவகுமார், மாணவரணி வினோத், பெரியார், நெல்லையப்பன், அந்தோணி ராஜ், தலைமை கழக பேச்சாளர்கள் சுத.மூர்த்தி, நெல்லை முத்தையா, ராவணன், மில் குமார், பத்மா, சௌந்திரம், மேரி, பிந்து, ஆனி ரேக்லண்ட், கிருஷ்ணவேணி, சித்ரா, சுப்புலட்சுமி, கவிதா, சங்கர் கணேஷ், சங்கர், வெங்கடேஷ் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மாநகரத்திற்கு உட்பட்ட தச்சநல்லூர், நெல்லை பேட்டை, மேலப்பாளையம், பாளையங்கோட்டை ஆகிய 4 பகுதிகளில் உள்ள 55 வார்டுகளில் இருந்து 1250 நபர்களும், சார்பு அணிகளின் சார்பில் 750 நபர்களும் ஆக மொத்தம் 2000 பேர்கள் கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

வேலூர் மாநகரம் – சங்கரன்பாளையம் பகுதி தி.மு.க. சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

## ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. – ஜி.முரளிகிருஷ்ணா பங்கேற்பு!

வேலூர், டிச. 28 -

வேலூர் மாநகர திமுக மற்றும் சங்கரன் பாளையம் பகுதி தி.மு.க. சார்பில் தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வதுபிறந்த நாளை முன்னிட்டு பகுதி கழக செயலாளர் ஜி.பால முரளி கிருஷ்ணா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நல திட்ட உதவிகளை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார்.

உடன் தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ண மூர்த்தி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகர துணை செயலாளர்கள் முன்னாஷெரிப், ஒய்.தேவநேசன் பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ். கதிரேசன் சி.சந்திரசேகர் , மா. ப.அன்பு நிதி, மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் எம். நூருல்லா, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வேலூர் ஜி. ரமேஷ் பகுதிகழக செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தர விஜி, எஸ். தயாள் ராஜ் பி.முருகப் பெருமாள் தி.அ.முனவர் பாஷா, சி.எம்.தங்கதுரை, ஆர்.கே. ஐயப்பன் மண்டல குழு தலைவர்கள் கே.யூசுப்கான், வீனஸ் ஆர். நரேந்திரன், வட்டக்கழக செயலாளர்கள் ஆர்.செல்வமணி, வி.ஜெய்சங்கர், ஜெ.ஜெயபிரகாஷ் எஸ். மோகன், ஜெ.ரமேஷ் மாமன்ற உறுப்பினர்கள் வி. எஸ் .முருகன் கா.சு. சண்முகம், எம் . மகேந்திரன் டி. திருப்பாவை மாவட்ட பிரதிநிதி வி . எஸ். எம். ஸ்ரீதர்மகேந்திரன் மாணவர் அணி அமைப்பாளர் பி.தேவராஜ், பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர். அசோக், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் டி. லோகநாதன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி. எம். டி .ஏ. பாலாஜி ,மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் கே. சீனிவாச காந்தி ,என் எஸ். ரவி ,ஆர்.அருண் எம். அந்தோணி ஏ .உமாசந்திரன் அப்துல் மஜீத் என்கின்ற காலப்பா, டி. சக்கரவர்த்தி கழகப் பேச்சாளர் கழிஞ்சூர் கண்ணன் வட்ட செயலாளர்கள் ஆர். நீதி (எ)அருணாச்சலம் எஸ். ராஜாஅப்பு என்கின்ற எஸ். தனசேகர் கே.ஆனந்த குமார் அரசுவழக்கறிஞர் என். ராஜா ஏ.கிருஷ்ண மூர்த்தி கோ .சரவணன் சி எஸ் அருணகிரி வி. கே. கருணாநிதி பி. விஜய், ஆர்.கருணாநிதி என். சுகுமார் த.முத்துக் குமரன் ஏ.சந்தானம் , எஸ்.மணிகண்டன், பி கோபிநாத் , கே.கோபிநாத், துபாய்எம்.சீனு, பா.சேட்டு, என்.உமாபதி , பகுதிகழக நிர்வாகிகள் யோகராஜ், தேவராஜ், உமாபதி, காலாவதி, ராஜா ,பரசுராமன், கார்த்திகேயன், சரவணன், ராஜா, ஜான்பாஷா, சதீஷ், வட்டக் கழக நிர்வாகிகள் ராமலிங்கம் ,ரவி ஜெயலட்சுமி, அன்பு அருணாச்சலம், ரங்கசாமி, முருகதாஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாநகர பிரதிநிதி வி.ஆர்.பூபதி , பகுதி இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ்.பிரேம் குமார் நன்றி கூறினர்.



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட மோட்டூர்,பள்ளத்தூர் ஆகிய ஊராட்சிகளில் கால்நடை பராமரிப்பு துறையின் வாயிலாக கோமாரி நோய்க்கான தடுப்பூசி முகாமினை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குனர் முரளி சதானந்தம், ஒன்றியக்குழு தலைவர்.திருமதி திருமுருகன், ஒன்றியச் செயலாளர்கள். க.முருகேசன், துணை சேர்மன்.ஜி.மோகன்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர். தசரதன், ஊராட்சி மன்ற தலைவர்கள், ராணிகதிரவேல், கவிதாகுமார், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் தோட்டாளம் ஊராட்சி ஒன்றியம் உடையராஜ பாளையம் கிராமம் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.9,77,000 மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடை கட்டிடத்தை ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாதனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.ராமமூர்த்தி, அய்யனூர் அசோகன், மாதனூர் மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் சா.சங்கர், ஊராட்சி மன்ற தலைவர் தர்மேந்தன், துணைத் தலைவர் ரமேஷ், ஒன்றிய குழுஉறுப்பினர் பரிமளா, ஜவகர் கார்த்திக் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.